**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–7

O.S.No.250/2017

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. கவிதா | வயது: 44 |
| த/பெ. : திரு. சதீஸ் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

1. 2 ம் வாதி ஆஜர். 2 ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் ஸ்ரீநிவாசபுரம் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா கிளையில் மேலாளராக 2 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சம்மனில் குறிப்பிட்டுள்ள ரேனுகாதேவியின் நடப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டதற்கான மனு நகல். ரேணுகாதேவியின் பேன் கார்டு நகல். ரேணுகாதேவியின் ரேசன் கார்டு. கம்பெனியின் பங்குதாரர் பத்திரம். 3 ம் பிரதிவாதியின் நிறுவனத்தின் பேன் கார்டு நகல். 3 ம் பிரதிவாதி நிறுவனத்தின் பதிவு சான்றிதழ் – நகல். நடப்பு கணக்கு எண். 30765011849 ற்குரிய 15.5.2009 முதல் 29.11.2022 வரை உள்ள வங்கி கணக்கு பறிமாற்ற விவரங்கள் – கணினி நகல் ஆகியவற்றை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். அவை அனைத்து – சா.சா.ஆ– Y8.

2. 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்குரிய நடப்பு கணக்கு அரம்பிப்பதற்காக பங்கு தாரர்கள் என்ற முறையில் ரேணுகாதேவியும், கஸ்தூரியும் கையொப்பம் செய்து 15.5.2009 ல் கொடுத்தாக உள்ளது. அன்றைய தேதியில் நான் மேலாளராக இல்லை. சா.சா.ஆ– Y8 உள்ள பங்குதாரர் ஆவணத்தில் 1.2.2008 என்று சொல்லப்பட்டுள்ளது. முகவரி விவரங்கள் அந்த ஆவணத்தில் உள்ளது. சாட்சி சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் எங்களிடம் இருந்தவற்றை மட்டும் தான் சா.சா.ஆ– Y8 தாக்கல் செய்துள்ளேன். 3 ம் பிரதிவாதி நிறுவனத்தின் நடப்பு கணக்கை முடித்து கொள்வதற்கு மனு யாரும் கொடுக்கவில்லை. 28.12.2019 பிறகு அந்த கணக்கில்

பணப்பறிமாற்றங்கள் ஏற்படவில்லை. 19.3.2011 ம் தேதியன்று ரூ.12,000/- ஒரே ஒரு பறிமாற்றம் ஏற்பட்டது. அதன் பிறகு பணபறிமாற்றம் இல்லாத காரணத்தால் கணக்கு inactive ஆக உள்ளது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

3ம் பிரதிவாதி நிறுவனத்தின் பெயரில் தொடங்கப்பட்ட நடப்பு கணக்கின் அசல் என்னவானது என்வென்றால் நான் வங்கியில் கேட்டபோது நகல் தான் கொடுத்தார்கள். அசல் என்னவானது என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணம் கணினி மையமாக்கப்பட்டது. கூட்டாண்மை நிறுவனமாக இருந்தால் கூட்டாண்மை நிறுவனத்தில் அனைவரும் கையொப்பம் செய்யவேண்டும் என்றால் சரி. கூட்டாண்மை நிறுவனத்தின் அனைவரும் கையொப்பம் செய்தார்கள் பணபரிமாற்றம் ஏற்படும் என்றால் தவறு. அவர்கள் யாரையாவது ஒருவரை நியமனம் செய்திருப்பார்கள். அந்த விவரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2024.11.13 18:41:43 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.